# شَرْحُ:

# «الْأُصُولِ السِّتَّةِ»

# ஆறு அடிப்படை அம்சங்கள் விளக்கம்

**ஆசிரியர்**

ஷெய்குல் இஸ்லாம் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் சுலைமான் அத்தமீமி(ரஹ்)

***விரிவுரை வழங்கியவர்:***

**அஷ்ஷெய் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதினா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர், ம.ஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.

https://www.alsarhaan.com

غفر الله له ولوالديه ولمن أعانه على إخراج هذا الكتاب

**இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிடும் அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக.**

முதலாம் பதிப்பு

பதிப்புரிமை ஆசிரியருக்குரியது

ஆனால் ஆசிரியரின் அனுமதி யுடன் மொழிபெயர்த்து ,

அச்சிட்டு இலவசமாக விநியோகிப்பவர்களுக்கு

அனுமதி உண்டு.

தொடர்புகளுக்கு

الرَّجاء التَّواصل على:

islamtorrent@gmail.com

# முன்னுரை

மார்க்க கல்வியை தேடும் ஒரு மாணவன் மார்க்கத்தின் விதிகள், அதன் மூல தத்துவங்களை முறையாக கற்றுக் கொள்வது அவசியம். இது சம்பந்தமாக தொகுக்கப்பட்ட சிறிய நூல்களில் ஒன்றுதான் செய்குல் இஸ்லாம் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் சுலைமான் அத்தமீமி அவர்கள் எழுதிய அருமையான சிறு நூலான "அல் உசூலுஸ் ஸித்தாஃ" (ஆறு அடிப்படைகள்) என்றழைக்கப்படும் இந் நூல். இதன் முக்கியத்துவம் கருதி ஏராளமான அறிஞர்கள் அதிகூடிய கவனத்தை செலுத்தியுள்ளனர். இதில் ஆசிரியர் அவர்கள் இஸ்லாமிய சன்மார்க்கம் நிறுவும் ஆறு அடிப்படைகளை மிகத் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார்கள். மாத்திரமன்றி இவ் அம்சங்களில் அதிகமானோர் திசைமாறிச் சென்றுள்ளதும் கவனிக்கத்தக்கது.

நான் இந்நூலை விரிவுரை செய்யும்போது புதிய ஒரு நடையை கையாண்டு அதை இலகுபடுத்துமுகமாக அதன் உள்ளடக்கத்தை அட்டவணைப்படுத்தியுள்ளேன். இதில் அல்லாமா அஷ்ஷெய்க் முஹம்மத் பின் சாலிக் அல் உதைமீன் அவர்களது விரிவுரை நூலை உசாதுணையாகக் கொண்டு எழுதியுள்ளேன்.

சில இடங்களில் தேவைக்கேற்ப சில மேலதிக தகவல்களையும் இணைத்துள்ளேன். எல்லாம் வல்ல அல்லாஹ் எமது இப்பணியை ஏற்று அதை தூயதாக்கியருள்வானாக, இதன் மூலம் எழுதியவருக்கும் வாசிப்பவருக்கும் பயனளிப்பானாக!! ஆமீன்.

## நூலின் துவக்கம்.

**நூலாசிரியரின் கூற்று:**

ஆறு அடிப்படை அம்சங்கள் உள்ளன, அவற்றை அல்லாஹ் தெள்ளத் தெளிவாக கற்பனையிலும் தோன்றாத அளவு பொதுமக்களுக்கு விளக்கியுள்ளான். இது ஆச்சரியத்திலும் ஆச்சரியமான, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் ஆற்றலை விளக்குகின்ற மாபெரும் சான்றாகவும் திகழ்கிறது. ஆனால் புத்திஜீவிகள், திறமைசாலிகள் என்று சொல்லப்படும் அநேகர் இவ்விடயத்தில் வழிதவறிவிட்டனர், அற்ப சொற்பமானவர்களே இதை புரிகின்றனர்.

**ஆறு அடிப்படைகளும் சுருக்கமாக:**

**அடிப்படை ஒன்று:**

"இஹ்லாஸ்" தூய்மை, அதற்கு எதிரான இணைவைப்பு பற்றிய விளக்கம்.

**அடிப்படை இரண்டு:**

இஸ்லாமிய மார்க்கத்தில் சமூகமாக இருத்தல், பிளவுகளை தவிர்த்தல்.

**அடிப்படை மூன்று:**

தலைவர்களுக்கு செவி சாய்த்து கட்டுப்படல், அவர்களை எதிர்த்து புரட்சி செய்வதை தவிர்த்தல்.

**அடிப்படை நான்கு:**

மார்க்க அறிஞர்கள், மார்க்க சட்டங்களை, சட்டக் கலை வல்லுநர்கள் பற்றிய விளக்கம், அதற்கு மாற்றமாக அவர்களைப் போன்று நடிப்பவர்கள் பற்றிய எச்சரிக்கை

**அடிப்படை ஐந்து:**

அல்லாஹ்வின் நேசர்கள் யார்? அதற்கு எதிரான சைத்தானின் நேசர்கள் யார்?

**அடிப்படை ஆறு:**

நேர்வழியை குர்ஆன் ஹதீஸிலிருந்து தேடுவதும், அதற்கு மாற்றமாக குர்ஆன் சுன்னாவை புறக்கணிப்பதும்.

**ஆறு அடிப்படை அம்சங்களை எதற்காக படிக்க வேண்டும்?**

1. அறிஞர்கள் அதை பரிந்துரைக்கின்றனர்.

02. இஸ்லாத்தின் அடிப்படைகளை அறிவதும் அதை உள்ளத்தால் ஏற்று அதன் அடிப்படையில் செயல்படுவதும்.

இந்நூல் ஆசிரியர் பிஸ்மில்லாஹ் எனும் வார்த்தையை கொண்டு ஆரம்பித்துள்ளார். இது பொதுவாக அறிஞர்கள் கடைபிடிக்கும் ஒரு வழிமுறையாகும். அதன் நோக்கம்:

01
அல்குர்ஆன், நபிமார்கள் மற்றும் ரசூல்மார்களை முன்மாதிரியாக கொள்வது

02
இரண்டு நபி ஸல் அவர்கள் கூறினார்கள்: முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொரு அம்சமும் அல்லாஹ்வின் பெயர் கூறி ஆரம்பிக்க படாவிட்டால் அது குறையுள்ளதே.

03
இஸ்லாத்தின் முன்னோடிகளான சலப் அறிஞர்களை முன்மாதிரியாக கொள்வது.

04
அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு ஆரம்பிப்பதால் பரக்கத் அபிவிருத்தி உண்டாகும் என்ற நோக்கில்.

**"பிஸ்மில்லாஹ் அர் ர்ரஹ்மான் அர்ரஹீம் " என்பதன் கருத்து யாது?**

| 01 | 02 | 03 | 04 |
|---|---|---|---|
| "பிஸ்மில்லாஹ்" அதன் பொருள் அல்லாவின் திருப்பெயரால் எழுதுகின்றேன். இப்படிச் சொல்வதன் நோக்கம் அல்லாஹ்வின் திருநாமத்தால் பரக்கத் உண்டாகும் என்பதும், அல்லாஹ்வின் உதவியே அனைத்திற்கும் தேவை என்பதையும் உணர்த்துவதற்காக. | "அல்லாஹ்" இது கண்ணியமும் மகத்துவமும் தாங்கி நிற்கும் பெயர். எல்லாம் வல்ல இறைவனின் பெயர், இப்பெயரை தொடர்ந்துதான் அல்லாஹ்வின் ஏனைய அனைத்து பெயர்களும் சொல்லப்படும். பெயர்களின் துவக்குவாய் எனலாம். | "அர் ரஹ்மான்" அதன் பொருள் எல்லா உயிரினங்களையும் வியாபித்து விடும் அன்பும், இரக்கமும் உடையவன். | “அர்ரஹீம் ” அதன் பொருள் அளவிலா அன்பும் அவ் அன்பை நாடியவர்களுக்கு வெளிப்படுத்துபவன். |

**ஆறு அடிப்படை அம்சங்கள் எனும்போது இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்கள் இந்த ஆறு மாத்திரம்தானா?**

**அல்குர்ஆன் அல் ஹதீஸ் இவ்விரண்டிலும் எண்கள் குறிப்பிடப்படும் போது இரு விதமாக நோக்கப்படவேண்டும்.**

01.
குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மாற்றமாக வேறு எண்கள் குர்ஆன் ஹதீஸில் எங்கும் குறிப்பிடப்படாமல் வருதல்.

அப்படி காணப்பட்டால் அதை மாத்திரமே எடுக்கப்படும் அதைவிட அதிகரிக்க அனுமதிக்கப்படமாட்டாது. உதாரணம் இஸ்லாத்தின் தூண்கள் ஐந்து, ஈமானின் தூண்கள் ஆறு, இவற்றை குறிப்பிடலாம்.

02.
குறிப்பிட்ட எண்ணை விட அதிகமாக குர்ஆன் ஹதீஸில் வேறொரு இடத்தில் வேறு விதமாக குறிப்பிடப்பட்டு வருவது.

இப்படி இருப்பின் நாம் மேலதிகமாக சொல்லப்படும் எண்ணிக்கைகளையும் அதிகரித்துக் கொள்ளலாம். உதாரணமாக நபி ஸல் அவர்கள் இயற்கைப் பண்புகள் என்று ஐந்தை குறிப்பிட்டார்கள், வேறொரு இடத்தில் 10 என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, ஐந்து என்பதை மட்டிடாது பத்து என்று நாம் அதிகரித்துக் கொள்ளலாம். அதேபோன்று ஏழு பெரும் பாவங்களை தவிர்ந்து கொள்ளுங்கள் என்றார்கள். பெரும்பாவங்கள் எனும்போது அவை ஏழு அல்ல. அதைத் தாண்டியும் எத்தனையோ பாவங்கள் உள்ளன என்பதை நாம் அறிவோம்.

## பல்வேறு எண்ணிக்கைகளை பலவிதமாக குறிப்பிடுவதற்கு காரணம் என்ன?

இது நபி (ஸல்) அவர்களின் அழகிய கற்பித்தல் முறையை உணர்த்துகின்றது. எனவே குறைத்த எண்ணிக்கையைக் காட்டி கற்றுக்கொடுக்கும் போது கேட்பவர்கள் அந்த சபையில் அதை கிரகித்து, இலகுவில் மனனமிடுவதற்கு எளிதாகிறது. மாறாக அந்த எண்ணிக்கை நோக்கமாக இருக்காது.
இதற்கு உதாரணமாக பின்வரும் நபி (ஸல்) அவர்களின் கூற்றை எடுத்துக் கொள்ளலாம். மூன்று அம்சங்கள் உள்ளன அவைகளில் சத்தியமிட்டு நான் சொல்கிறேன், உங்களுக்கு ஒரு செய்தியை சொல்லப் போகிறேன் அதை மனனமிட்டுக்கொள்ளுங்கள். தர்மம் செய்யும் அடியானின் செல்வம் ஒருபோதும் குறைவதில்லை.
(நூல்:திர்மிதி)

ஆகவே மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில்தான் நூலாசிரியரும் ஆறு அடிப்படைகள் என்று குறிப்பிட்டிருப்பதன் அர்த்தமாகும். மாறாக அடிப்படைகள் இந்த ஆறு அம்சங்கள் மாத்திரம்தான் என்று வரையறுப்பது நோக்கமிலலை.

## முக்கிய சில விடயங்கள்.

01. ஸலபுகளான முன்னோர்களிடம் ஆறு அம்சங்கள் எனும் பிரயோகம் கருத்தொற்றுமைப்பட்டதா?
ஆம்! இந்த ஆறு அம்சங்களுக்கும், அல் குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள் உட்பட இமாம்கள், சலபுஸ்ஸாலிஹீன்கள் சஹாபாக்கள் கூற்றுக்களும் ஆதாரமாகக் காணப்படுகின்றன.

02. ஆறு அம்சங்கள் பற்றி முதன் முதலில் எழுதியவர் யார்?
பொதுவாக இந்த ஆறு அம்சங்கள் கூறப்படாத அகீதா (கொள்கை) புத்தகங்கள் கிடையாது,எனினும் முதன் முதலில் இது பற்றித் தொகுத்தவர் சீர்திருத்தவாதி முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் (ரஹ்) அவர்கள்.

03. இந்த ஆறு அம்சங்களை எப்படி சரிவர புரிந்து கொள்ளலாம்?
இது ஒவ்வொன்றையும் தெளிவாக அறிவதுடன் அதற்கு எதிரான கொள்கை எதோ அதையும் சேர்த்து படிக்க வேண்டும். அப்போதுதான் துல்லியமாக புரிந்து கொள்ளலாம்.

**"சுன்னாவின் அடிப்படைகள்" "அகீதா" நூல்கள் "அஸ் ஸுன்னா" நூல்கள் "ஆறு அடிப்படைகள்" என்ற பெயர்களில் பல்வகை நூல்கள் காணப்படுகின்றன இவை அனைத்தும் ஒன்றா அல்லது வெவ்வேறானதா?**

இவை அனைத்தும் ஒரே தலைப்பில் தொகுக்கப்பட்ட நூல்களே. ஆனால் அறிஞர்கள் பல்வேறு வித்தியாசமான தலைப்புகளையிட்டு மாணவர்களை உற்சாகமூட்டி அதி கூடிய விளக்கமளிக்கவும், இன்னும் சூழ்நிலை சந்தர்ப்பங்கள் தேவைகளை கருத்தில் கொண்டும் இப்படி இடுகின்றனர்.

ஆகவேதான், சிலவேளைகளில் "உஸுலுஸ் ஸுன்னா" என்று பெயரிடப்படும். உதாரணம் இமாம் அஹ்மத் பின் ஹம்பல் அவர்கள் எழுதிய "உஸுலுஸ் ஸுன்னா"

சிலவேளை "அல் அகீதா" என்று பேரிடப்படும். உதாரணமாக "அல் அகீதா அல்வாசிதிய்யா" ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமியா அவர்கள் எழுதியது. இன்னும் சில வேளை "அஸ்ஸுன்னாஃ" என்று பெயரிடப்படும். உதாரணமாக இமாம் ஃகல்லால் அவர்கள் எழுதிய நூலை குறிப்பிடலாம்.

அல்லது "அல் ஈமான்" என்று பெயரிடப்படும். உதாரணமாக இமாம் இப்னு அபீ ஷெய்பா எழுதிய "அல் ஈமான்" என்ற நூலை எடுத்துக் கொள்ளலாம்.

அல்லது "அத் தௌஹீத்"என்றும் பெயரிடப்படும். உதாரணமாக இப்னு ஹுசைமா அவர்கள் எழுதிய "அத் தௌஹீத்" என்ற நூலைக் குறிப்பிடலாம்.

இன்னும் சில வேளை" அல் உஸூலுஸ் சித்தா" என்றும் பெயரிடப்படும். உதாரணமாக நாம் படிக்கும் நூலான "அல் உஸூலுஸ் சித்தா" என்ற நூலை எடுத்துக் கொள்ளலாம்.

## அடிப்படை ஒன்று

**நூலாசிரியரின் கூற்று:**

இணைதுணை அற்ற ஏக இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கு வணக்கத்தை தூயதாக்குவதும், அதற்கெதிரான இணைவைப்பு பற்றிய விளக்கமும், இவ்வடிப்படை பற்றி குர்ஆன் சாதாரண பாமரனுக்கு புரியும் வகையில் எடுத்தியம்பும் விதங்கள் பற்றியதுமாகும்.

பின்னர் பல தலைமுறை கடந்து செல்ல, சைத்தான் அவர்களுக்கு நல்லோர்கள், ஸாலிஹீன்களை குறைத்து மதிப்பிடுவது, அவர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய உரிமைகளை உதாசீனம் செய்வது ஆகாது எனும் விடயத்தில் தூய்மையை காட்டினான், அதனடிப்படையில் அவர்களை அன்பு வைத்து பின்பற்ற வேண்டும் எனும் தோற்றப்பாட்டை உருவாக்கி பின்னர் அவர்களை வணங்க வைத்து இணைவைப்பில் வீழ்த்தி விட்டான்.

**அல்லாஹ்வுக்காக வேண்டியே வணக்கத்தை தூய தாக்குதல்.**

அதாவது ஒரு அடியான் அவனுடைய இபாதத்துக்கள் மூலம் அல்லாஹ்விடம் நெருக்கம் பெறவேண்டும் என்றும் அவன் அருள் நிறைந்த சுவனத்தை அடைய வேண்டும் என்றும் எண்ணிக் கொள்வது.

**இது பின்வரும் ஐந்து அம்சங்களில் அமையும்:**

| 01 | 02 | 03 | 04 | 05 |
| --- | --- | --- | --- | --- |
| எண்ணம் (நிய்யத்தில்) அல்லாஹ்வுக்கு இக்லாஸ் உடையவனாக இருப்பது. | அல்லாஹ்வை அன்பு வைப்பதில் இக்லாஸுடையவனாக இருப்பது | அல்லாஹ்வை மகத்துவப் படுத்துவதில் இக்லாஸுடையவனாக இருப்பது. | உள்ளும் புறமும் அல்லாஹ்வுக்கு இக்லாஸுடையவனாக இருப்பது. | தனது இபாதத் மூலம் அல்லாவின் திருப்தியையும் அவனது சுவர்க்கத்தையும் அடைய வேண்டும் என்பதை இலக்காகக் கொள்வது. |

**இக்லாஸ் பற்றி குர்ஆனில் இடம்பெற்றுள்ள சில வசனங்கள் வருமாறு:**

நீர் கூறும்: "மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும்.
6:162

நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்: "நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை; எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹீ அறிவிக்காமலில் லை.
21:25 .

அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக (தவறான வழியிலிருந்து விலகி சரியான வழியில்) பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும்; மேலும் தொழுகையை அவர்கள் நிலைநாட்டவேண்டும்; மேலும் ஜகாத்தை அவர்கள் வழங்க வேண்டும் என்பதைத் தவிர (வேறெதுவும்) அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இதுதான் நேரான மார்க்கமாகும்.
98:5

## இக்லாஸ் பற்றி இடம் பெற்றுள்ள நபி மொழிகள் சில வருமாறு.:

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் நீங்கள் நினைத்ததும் அல்லாஹ் நாடியதும் நடந்தது என்று கூறினார். அதற்கு நபியவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வுக்கு நிகராக என்னை ஆக்கி விட்டாயா? அல்லாஹ் நாடியது மாத்திரமே நடந்தது என்று சொல் என்றார்கள்.
ஆதாரம்: அஹ்மத்

நபி (ஸல்) கூறினார்கள்: யார் அல்லாஹ் அல்லாதவர்களை கொண்டு சத்தியம் செய்வார்களோ அவர்கள் காஃபிராகி விட்டார்கள்,அல்லது இணைவைத்து விட்டார்கள்.
ஆதாரம்: அஹ்மத் , அபூதாவூத், திர்மதி.

நபி (ஸல்) கூறினார்கள்: மனிதர்களே நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கும் வார்த்தைகளை சொல்லுங்கள், ஷைத்தான் உங்களை வழி தவறிவிடச் செய்யக்கூடாது. நான் அப்துல்லாவின் மகன் முஹம்மத்(ஸல்) அல்லாஹ்வின் அடியானும் அவனுடைய தூதருமாவேன், அல்லாஹ் எனக்களித்த அந்தஸ்துக்கு மேலால் என்னை உயர்த்துவதை நான் விரும்ப மாட்டேன்.
ஆதாரம்: அஹ்மத்.

## இக்லாஸுக்கு எதிரானது "ஷிர்க்" இணைவைப்பு.

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான்; இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான்; யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள். 4:48

மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், "அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்; ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்" என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்; எனவே அ(ந்த சமூகத்த)வர்களில் அல்லாஹ் நேர்வழி காட்டியோரும் இருக்கிறார்கள்; வழிகேடே விதிக்கப்பெற்றோரும் அவர்களில் இருக்கிறார்கள்; ஆகவே நீங்கள் பூமியில் சுற்றுப்பயணம் செய்து, பொய்யர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதைக் கவனியுங்கள். 16:36

நபி (ஸல்) கூறினார்கள்: யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணை கற்பிக்காது அல்லாஹ்வை சந்தித்தால் அவர் சுவர்க்கம் நுழைவார். யார் அல்லாவுக்கு எதையேனும் ஒன்றை இணை வைத்த நிலையில் அல்லாஹ்வை சந்திப்பாரோ அவர் நரகம் நுழைவார். நூல்: முஸ்லிம்.

## இணைவைப்பு இருவகைப்படும்

**01. பெரியது**

மார்க்கத்தை விட்டும் வெளியேற்றக் கூடியது

அதாவது: தவ்ஹீதுக்கு முழுக்க முழுக்க எதிராக அமையும் என அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் குறிப்பிட்டுள்ள அனைத்து இணைவைப்பும் இதில் அடங்கும்.

உதாரணம்:
மண்ணறையில் அடக்கப்பட்டிருப்பவரிடம் பிரார்த்தனை செய்வது, அல்லது கண்ணுக்கு மறைவான தொலைவில் உள்ள ஒருவரிடம் ஏதோ ஒரு ஆபத்திலிருந்து தன்னை காப்பாற்றுமாறு வேண்டுவது.

**02. சிறிய இணைவைப்பு.**

மார்க்கத்திலிருந்து வெளியேற்றிவிடாது.

அதாவது சொல் செயல்களால் இடம்பெறக்கூடியவும் அவனுடைய தூதரும் ஷிர்க் என்று அடையாளப்படுத்தியவை, ஆனால் அது தவ்ஹீதுக்கு முழுக்க முழுக்க எதிரானதாக இருக்காது.

உதாரணம் :
அல்லாஹ் அல்லாதவர்களை வைத்து சத்தியம் செய்தல், முகஸ்துதி ஆகியவற்றை குறிப்பிடலாம்.

## பாவங்களின் படித்தரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பெரிய இணை வைப்பு | சிறிய இணைவைப்பு | பெரும் பாவங்கள் | சிறிய பாவங்கள் |

## பெரிய இணைவைப்பு சிறிய இணைவைப்பு, இரண்டுக்குமிடையிலான வேறுபாடுகள்.

**பெரிய இணைவைப்பு :**

- மார்க்கத்தை விட்டும் வெளியேற்றும்.
- அமல்களை வீணாக்கி விடும் .
- நிரந்தர நரகத்தை ஏற்படுத்தும்.
- உயிரும் உடைமையும் பறிமுதல் செய்யப்படும்.
- அதே நிலையில் மரணித்து விட்டால் மன்னிப்பு கிடைக்காது.
- பெரும்பாவம் என்று தகுந்த ஆதாரம் காணப்படும்.
- இப்பிரபஞ்சத்தை நிர்வகிக்க அல்லாஹ் அல்லாதவர்களுக்கு ஆற்றல் உண்டு என்றும், அவர்கள் கரத்தில் நன்மையை உண்டாக்கவும், தீங்குகளை தடுக்கவும் சக்தியுண்டு என்று நம்புவது.

**சிறிய இணைவைப்பு:**

- மார்க்கத்தை விட்டும் வெளியேற்றாது.
- குறித்து அமலை வீணாக்கி விடும் அனைத்தையும் அல்ல.
- நிரந்தர நரகத்தை ஏற்படுத்தாது .
- உயிர் உடமை பறி போகாது .
- அல்லாஹ் காரணமாக்காத ஒன்றை காரணம் என எண்ணி செயல்படுவது.
- அதே நிலையில் மரணித்தால் மன்னிப்பு உண்டா என்பதில் சர்ச்சை காணப்படுகிறது.
- அது சிறிய பாவம் என்று ஆதாரங்கள் காணப்படும்.
- பெரிய இணை வைப்புக்கு இட்டுச் செல்லும் காரணிகள் அனைத்தும் சிறிய இணைவைப்பாகும்.
- “அல்” சேராது “ஷிர்க்” என்று சொல்லப்பட்ட அனைத்தும் சிறிய வகை என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

## இணைவைப்பை பயப்படல்.

இணைவைப்பு மிகவும் மறைவானது ஆகவே ரஹ்மானின் நேசரும் முவஹ்ஹிதீன்களின் தலைவருமான நபி இப்ராஹிம் (அலை) அதை பயந்தார்கள். அல்லாஹ் அவர்களைப் பற்றி கூறும் போது என்னையும் என் சந்ததியினரையும் சிலைவழிபாட்டில் இருந்து தூரமாக்கிவிடு என்று அவர்கள் பிரார்த்தனை செய்ததாக அல்லாஹ் கூறுகின்றான்.
இப்ராஹிம் 35

இமாம் இப்னு அபீ முலைக்கா (ரஹ்) கூறுகிறார்கள்: இறை தூதர் (ஸல்) அவர்களின் தோழர்களில் 30 பேரை நான் சந்தித்திருக்கிறேன், அவர்கள் யாவரும் தன் மீது நயவஞ்சகத்தனம் இருக்குமோ என்று பயப்படுபவர்களாக இருந்தார்கள். நயவஞ்சகத்தை நயவஞ்சகன்தான் பயப்படாமல் இருப்பான். நயவஞ்சகத்தை பயப்படுபவன் முஃமின் மாத்திரம்தான்.

## ஷிர்கை பயப்படுவது எப்படி அமைய வேண்டும்?

01
தவ்ஹீதை கற்று அதன்படி நடந்து, அதன் பக்கம் அழைத்து அதில் பொறுமையுடன் இருத்தல்.

.02
இணைவைப்பை படித்து அதன் காரணிகளை அறிந்து அதிலிருந்து தூரமாகி வாழுதல்.

.03
இறைவனிடம் இருகரம் ஏந்தி பிரார்த்தித்து அவன் உதவியை வேண்டுதல்..

04
தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக ஷிர்க், அது சார்ந்தோர்களை விட்டும் தூரமாக இருப்பது.

## அடிப்படை இரண்டு

நூலாசிரியரின் கூற்று:

**அல்லாஹ் எமக்கு மார்க்கத்தில் பிரிந்துவிடாது கூட்டாக இருக்குமாறு ஏவியுள்ளான். இவ்விடயத்தை அல்லாஹ் சாதாரண சமூகத்தில் கல்லாதவர்கள் புரியுமளவுக்கு தெளிவாகவும் விரிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளான்.**

நமக்கு முன் மார்க்கத்தில் பிளவுபட்டு நாசமடைந்தோரைப் போல் நாம் இருக்கக் கூடாது என்று தடை செய்துள்ளான். இவ்விடயத்தை இறைத்தூதர்களுக்கும் ஏவியுள்ளான். இது பற்றி இன்னும் விளக்கமாக, சுன்னாவில் வந்துள்ள செய்திகள் தெளிவூட்டுகின்ற அதே நேரம் வியக்கத்தக்க வகையில் இடம்பெற்றுள்ளன.

ஆனால், இறுதியில் என்னவாயிற்று? மார்க்க அடிப்படை அம்சங்களிலும், கிளை அம்சங்களிலும் பிரச்சினைப்படுவதே அறிவும் மார்க்க சட்டக்கலை தெளிவும் என்றாகிவிட்டது. மார்க்கத்தில் ஒற்றுமைப்படும் அம்சத்தைப் பேசுவோர் அறிவு குறைந்தோர் அல்லது நயவஞ்சகர்கள் போல் பார்க்கப்படுகிறது.

### மார்க்கத்தில் ஒற்றுமைப்படுவது சம்பந்தமாக வந்துள்ள குர்ஆன் வசனங்கள் சில:

இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள். அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நிஃமத்களை (அருள் கொடைகளை) நினைத்துப் பாருங்கள். நீங்கள் பகைவர்களாய் இருந்தீர்கள் - உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து, அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகிவிட்டீர்கள். இன்னும், நீங்கள் (நரக) நெருப்புக் குழியின் கரை மீதிருந்தீர்கள் அதனின்றும் அவன் உங்களைக் காப்பாற்றினான் - நீங்கள் நேர் வழி பெறும் பொருட்டு அல்லாஹ் இவ்வாறு தன் ஆயத்களை - வசனங்களை உங்களுக்கு தெளிவாக்குகிறான். (3:103)

(இறைவனின்) தெளிவான ஆதாரங்கள் தங்களிடம் வந்த பின்னரும், யார் தங்களுக்குள் பிரிவையுண்டுபண்ணிக் கொண்டு, மாறுபாடாகி விட்டார்களோ, அவர்கள் போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள். அத்ததையோருக்குக் கடுமையான வேதனை உண்டு. (3:105)

நிச்சயமாக எவர்கள் தங்களுடைய மார்க்கத்தை (தம் விருப்பப்படி பலவாறாகப்) பிரித்து, பல பிரிவினர்களாகப் பிரிந்து விட்டனரோ அவர்களுடன் (நபியே!) உமக்கு எவ்வித சம்பந்தமுமில்லை அவர்களுடைய விஷயமெல்லாம் அல்லாஹ்விடமே உள்ளது - அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றைப் பற்றி முடிவில் அவனே அவர்களுக்கு அறிவிப்பான். (6:159)

இன்னும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் - நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் (அவ்வாறு கொண்டால்) கோழைகளாகி விடுவீர்கள் உங்கள் பலம் குன்றிவிடும் (துன்பங்களைச் சகித்துக் கொண்டு) நீங்கள் பொறுமையாக இருங்கள் - நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கின்றான். (8:46)

## ஒற்றுமையை வழியுறுத்தும் நபிமொழிகள்.

| | | |
|---|---|---|
| ஒரு மு∴மின் மற்ற மு∴மினுக்கு கட்டடத்தைப் போன்றவன். அதில் ஒன்று மற்றொன்றை பிடித்துக் கொண்டிருக்கும். (நூல் புகாரி, முஸ்லிம்) | ”நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமைப்பட வேண்டாம், கோபித்துக் கொள்ள வேண்டாம் குறைகளை தேட வேண்டாம், ஒருவர் வியாபாரத்திற்கு எதிராக இன்னொருவர் வியாபாரம் செய்ய வேண்டாம், அல்லாஹ்வின் அடியார்களாக சகோதரர்களாக மாறிவிடுங்கள்.” (நூல்: புகாரி, முஸ்லிம்) | ”ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமின் சகோதரனாவான், அவனுக்கு அநியாயம் செய்ய மாட்டான், அவனை கைவிடமாட்டான், அவனை அவமதிக்கமாட்டான். இறையச்சம் இங்குள்ளது! இறையச்சம் இங்குள்ளது! என தன்நெஞ்சை நோக்கி நபி (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். ஒரு முஸ்லிம் கெட்டவனாக மாற தன் சகோதர முஸ்லிமை அற்பமாக எண்ணுவதே போதுமானது. ஒரு முஸ்லிமின் உயிரும், மானமும், செல்வமும் மற்ற முஸ்லிமின் மீது ஹராம் ஆகும். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்) |

**இதற்கு மாற்றமாக, முஸ்லிம்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தும் அனைத்து அம்சங்களையும் நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். தன் சொல்லாலும் செயலாலும் அன்பையும் நல்லிணக்கத்தையும் தூண்டினார்கள்.**

## ஸஹாபாக்களின் முன்மாதிரிமிக்க செயல்பாடு

ஸஹாபாக்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவர்களுக்கிடையில் பிளவுகள், பகைமையுணர்வு கோபம் காணப்படவில்லை.

இதற்கு எடுத்துக்காட்டாக நபி (ஸல்) அவர்கள் அகழிப் போரின் பின்னர் தன் தோழர்களை பார்த்து கூறினார்கள்:" உங்களில் எவரும் "பனூ குறைழா" எனும் இடத்தை அடையாமல் அஸர் தொழுகையை நிறைவேற்ற வேண்டாம்"என. ஆனால் வழியில் அஸருடைய நேரம் தப்பிவிடும் என்று பயந்த போது சஹாபாக்கள் இருவகையான கருத்துக்களை கொண்டனர்.

ஒரு சாரார் நபியின் சொல்லுக்குக் கட்டுப்படுவோம் எனக் கூறி தொழாதிருந்தனர். மறுசாரார் வழியிலேயே தொழுகையை நிறைவேற்றினர். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அப்படிக் கூறியது வேகமாகவும் அவசரமாகவும் செல்ல வேண்டும் எனும் நோக்கில்தான் என்றனர். அவர்களில் யாரும் மற்றவரை பகைத்துக்கொள்ளவில்லை.

## சலஃப் (முன்னோர்களின்) செயல்பாடு

**கருத்து வேறுபாடுகள் காணப்படும் அம்சங்களில் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினர்களின் கோட்பாடு என்னவென்றால் கருத்து வேறுபாடு இஜ்திஹாத் சார்ந்த விடயமாக காணப்பட்டு, சரியான ஆய்வின் அடிப்படையில் அமைந்தால் ஒருவர் மற்றவரை சகித்துக் கொள்வர், பகைமை கொள்ளமாட்டார்கள்.**

**இஸ்லாமிய சன்மார்க்கத்தில் ஒற்றுமையின் வெளிப்பாடுகள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரே இறைவனை வணங்குவதில் ஒற்றுமை. | ஒரே நபியை பின்பற்றுவதில் ஒற்றுமை. | ஒரே ஷரீஆ சட்டதிட்டங்களை அமுல்படுத்துவதில் ஒற்றுமை. | ஒரே கிப்லாவை பின்பற்றுவதில் ஒற்றுமை. | ஒரே கலீஃபா உள்ளமை. |
| ஐவேளைத் தொழுகையை ஒவ்வொரு நாளும் நிறைவேற்றுவதில் ஒற்றுமை. | ஒரு ஊர்வாசிகள் ஒவ்வொரு ஜும் ஆவிலும் ஒற்றுமைப்படல். | ஒவ்வொரு பெருநாள் தினத்திலும் ஆண்கள் பெண்கள் சிறுவர்கள் உட்பட அனைவரும் ஒற்றுமைப்படல். | அரபா மைதானத்தில் முழு உலக மக்களும் ஒற்றுமைப்படல். | |

**கவனிக்க!**

“”**என் சமூகத்தில் கருத்துவேற்றுமையும் இறை அருளாகும்**” என்று ஒரு ஹதீஸ் காணப்படுகின்றது. ஆனால் அந்த ஹதீஸ் ஆதாரப்பூர்வமற்றது, கருத்து வேற்றுமை இறை அருள் என்றால் ஒற்றுமையை என்னவென்று சொல்வது!?

# அடிப்படை மூன்று

**நூலாசிரியரின் கூற்று :**

**ஒற்றுமை படல் முழு வடிவம் பெற நம் தலைவர்களுக்கு செவி சாய்த்து கட்டுப்படல் அவசியம். அவர்கள் ஹபஷா அடிமைகளாக இருந்தாலும் சரி.**

இவ்விடயத்தை அல்லாஹ் தெள்ளத் தெளிவாகவும் விபரமாகவும், எப்படி விளக்க வேண்டுமோ அப்படியான முறைகளில் விளக்கியுள்ளான். ஆனால் இவ் அடிப்படைய அம்சம் மார்க்க அறிஞர்கள் என்றழைக்கப்படும் அனேகமானோரிடம் அறிமுகமற்றதாகவே காணப்படுகின்றது.

இது இப்படி இருக்குமாயின் எப்படி இதை அமுலுக்கு கொண்டு வர முடியும். ?!

**தலைவர்களுக்கு செவி சாய்த்து கட்டுப்படல் பின்வரும் அம்சங்களில் அமையும்:**

| | |
|---|---|
| 01. அவர்கள் ஏவியவற்றுக்கு கட்டுப்படல். | 02. அவர்கள் தடுத்தவற்றை விட்டு விடல். |

## திருமறை அல்குர்ஆனில் பொறுப்புதாரிகள், தலைவர்களுக்கு கட்டுப்படுவதன் அவசியத்தை உணர்த்தும் வசனங்கள் சில:

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள் இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள். உங்களில் ஏதாவது ஒரு விஷயத்தில் பிணக்கு ஏற்படுமானால் - மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புபவர்களாக இருப்பின் - அதை அல்லாஹ்விடமும், (அவன்) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள் - இதுதான் (உங்களுக்கு) மிகவும் சிறப்பான, அழகான முடிவாக இருக்கும். (4:59)

இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள். அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நிஃமத்களை (அருள் கொடைகளை) நினைத்துப் பாருங்கள். நீங்கள் பகைவர்களாய் இருந்தீர்கள் - உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து, அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகிவிட்டீர்கள். இன்னும், நீங்கள் (நரக) நெருப்புக் குழியின் கரை மீதிருந்தீர்கள் அதனின்றும் அவன் உங்களைக் காப்பாற்றினான் - நீங்கள் நேர் வழி பெறும் பொருட்டு அல்லாஹ் இவ்வாறு தன் வசனங்களை உங்களுக்கு தெளிவாக்குகிறான். (3:103)

இன்னும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் (அவ்வாறு கொண்டால்) கோழைகளாகி விடுவீர்கள் உங்கள் பலம் குன்றிவிடும் (துன்பங்களைச் சகித்துக் கொண்டு) நீங்கள் பொறுமையாக இருங்கள் - நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கின்றான். (8:46)

**இவர்களுக்கு தலைவர்களுக்கு கட்டுப்படல் கட்டுப்படுவதன் அவசியத்தை உணர்த்தும் நபிமொழிகள் சில:**

`இன்பத்திலும் துன்பத்திலும், விருப்பிலும் வெறுப்பிலும், எங்களைவிடப் பிறருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்போதும் (தலைமையின் கட்டளையைச்) செவியுற்றுக் கீழ்ப் படிந்து நடப்போம் என்றும், அதிகாரத்திலிருப்போருடன் அவருடைய அதிகாரம் தொடர்பாகச் சண்டையிடமாட்டோம் என்றும் நபி (ஸல்) அவர்களிடம் நாங்கள் உறுதிமொழி அளித்தோம். அப்போது நபியவர்கள் உங்களுக்கு அல்லாஹ்விடம் ஆதாரமாக அமைக்கூடிய தெளிவான குப்ரை அவர்களிடம் கண்டாலே தவிர எனக் கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

யாராவது தன்னுடைய தலைவரிடம் தவறொன்றைக் கண்டால் பொறுமையாக இருக்கட்டும், யார் பைஅத்தை முறித்து சமூக ஒற்றுமையை விட்டும் ஒரு சான் அழவேனும் பிரிந்து சென்று மரணிப்பாரோ அவருடைய மரணம் ஜாஹிலிய்ய மரணம் ஆகும். (நூல்: புகாரி முஸ்லிம்)

யார் தலைவருக்கு கட்டுப்படும் பையத்தை முறித்துக் கொள்வாரோ அவர் எவ்வித ஆதாரமும் இல்லாத நிலையிலே நாளை மறுமையில் அல்லாஹ்வை சந்திப்பார். (நூல்: முஸ்லிம்)

**வரலாறு நெடுகிலும் சமூகத்தின் நிலையை உற்று நோக்கினால் பின்வரும் அம்சங்களை காண முடியும்:**

01

சமூகம் மார்க்கத்தை உறுதியாக கடைப்பிடித்து அதில் ஒற்றுமைப்பட்டு தலைவர்களுக்கு கட்டுப்பட்டு அவர்களுக்கு மரியாதை செய்த காலகட்டத்தில் பூமியில் அவர்களுக்கு தலைமைத்துவமும் உயர்வும் வெற்றியும் தழைத்தோங்கியது.

02

எப்போது அவர்கள் மார்க்கத்தில் நூதன செயல்களை உருவாக்கி, அதில் பிளவு பட்டு தம் தலைமைகளுக்கெதிராக கிளர்ந்தெழுந்து புரட்சி செய்து, பல குழுக்களாக பிரிந்தனரோ அப்போதிருந்து எதிரிகளின் உள்ளங்களில் அவர்களை பற்றிய பயம் நீக்கப்பட்டது.

தங்களுக்கிடையில் சண்டையிட்டுக் கொண்டதால் தோல்வியை தழுவினர், அவர்களின் பலம் நீங்கி போனது, அவர்களுக்கு எதிராக பிற சமூகங்கள் படையெடுத்தனர், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் சருகுகள் போன்று மாறினர்.

**தலைவர்கள் பிரஜைகள் என்ற வகையில் எமது பொறுப்பு என்ன?**

எம் மீது அல்லாஹ் கடமையாக்கியுள்ள ஒத்துழைப்பு, பரஸ்பர அன்பு ஆகியவற்றை நன்மையான காரியங்கள், நன்மைக்கு உதவும் வகையில் நிலவச் செய்தல், பொது நலன்களில் ஒற்றுமைப்படல், சத்தியத்தில் ஒற்றுமைப்பட்டு அதற்கு ஒருவருக்கொருவர் உதவியாக இருத்தல், எமது செயல்கள் அனைத்திலும் தூய எண்ணத்தை பேணுதல், நமது ஒரே இலக்கான இந்த சமூகத்தை ஆன்மீக, லௌகீக ரீதியில் சீரமைக்கும் உயரிய இலக்கை அடைய முயற்சித்தல். மேலும் இவை அனைத்தையும் சாத்தியப்படுத்த வேண்டுமாயின் நாம் ஒற்றுமைப்பட்டு எமக்கிடையில் காணப்படும் முரண்பாடுகள், பிரச்சினைகளை கைவிட வேண்டும்.

**தலைவர்களுக்கு கட்டுப்பட்டு அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்யாதிருக்க உதவிடும் வழிகள் சில.**

- உலமாக்களுக்கும் தலைவர்களுக்கும் இறைவனிடம் இருகரம் ஏந்தி பிராத்தித்தல், அவர்களை அன்பு வைத்தல்,

- சுவர்க்கம் இறைவனிடமே வேண்டப்பட வேண்டும், அவ்வாறே ரிஸ்க்கும் அல்லாஹ்விடமே வேண்டப்பட வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: மரணிக்காத இறைவனான நித்திய ஜீவன் அல்லாஹ்வின் மீது பொறுப்புச்சாட்டுங்கள். (புர்கான்:58)

- கிடைத்தால் திருப்தி அடைந்து, கிடைக்காவிட்டால் ஆத்திரப்படும் மனிதனாக இருக்கக் கூடாது.

- அல்லாஹ்விடம் யா அல்லாஹ்! நீ ஹராமாக்கியவற்றை விட்டும் நீ ஹலால் ஆக்கியதைக் கொண்டு எனக்கு திருப்தி அளிப்பாயாக! உன்னுடைய அருட்கொடைகளால் உன் அல்லாதவர்களை விட்டும் என்னை தேவையற்றவனாக ஆக்கி வைப்பாயாக!

- அல்லாஹ்வுடன் மாத்திரம் உள்ளத்தை தொடர்புபடுத்திக்கொண்டு ஆட்சியாளர்களுடனோ, அறிவாளிகளுடனோ, அமைச்சர்களுடனோ, செல்வந்தர்களுடனோ உள்ளத்தை தொடர்பு படுத்தாதிருத்தல்.

- ஒரு விசுவாசி பிற விசுவாசியை குறை சொல்ல மாட்டான், இது ஒரு நபிமொழி இது ஆட்சியாளர்கள் விடயத்திலும் பொருந்தும் என அஷ்ஷெய்க் நாஸிர் குறிப்பிடுகின்றார்கள்.

- எமது சின்னம் சீர்திருத்த சின்னமாகும், சமூகத்தையும் தனி மனிதனையும் சீர்திருத்துவதை நோக்காகக் கொண்டது.

- சலபுகளான முன்னோர்களின் வரலாற்றைப் படிப்பது அதிலிருந்து ஆட்சியாளர்களுடன் அவர்கள் எப்படி நடந்துகொணடனர் என்பதை அறிந்து கொள்வது.

- செய்திகளை அதிகம் பின் தொடர்வதை தவிர்ப்பது.

# அடிப்படை 04

**நூலாசிரியரின் கூற்று:**

**மார்க்க அறிவு, அறிஞர்கள், இஸ்லாமிய சட்டக்கலை, சட்டக்கலை வல்லுனர்கள் பற்றிய விளக்கமும், அவர்கள் வேடம் பூண்டு அவர்களைப் போன்று நடிப்பவர்கள் பற்றிய தெளிவும்.**

எல்லாம் வல்ல அல்லாஹ் இவ்வடிப்படையை சூரா அல்பகரா வசனம் 40 முதல் 122 வசனம் வரை விளக்கியுள்ளான்.

இதை இன்னும் தெளிவாக சாதாரண பொது மகனுக்கு புரியும் வகையில் சுன்னாவில் அதிகம் அதிகம் பகிரங்கமாக விளக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் இறுதியில் இவ்வடிப்படை அறிமுகமற்ற விடயமாக மாறிப்போனது. மார்க்க அறிவும், மார்க்க சட்டப் புலமையும் பித்அத்துகள், வழிகேடுகளாக தோற்றம் பெற்றது. சத்தியத்தை அசத்தியத்துடன் கலப்பது அவர்களின் விருப்புக்குரியதாக மாறியது.

அல்லாஹ் அடியார்களுக்கு கடமையாக்கி, போற்றிப் புகழும் (அல்குர்ஆன் அல் ஹதீஸை அடிப்படையாகக் கொண்ட) மார்க்க கல்வியைப் பேசுபவர்கள் புத்தி சுவாதீனமற்றவர்களாக அல்லது நயவஞ்சகர்களாக நோக்கப்பட்டனர்.

இவர்களை எதிர்த்து மறுதலிப்பவர்கள், இவர்கள் பற்றி எச்சரிப்பவர்கள் மார்க்க அறிஞர்களாகவும் சட்ட வல்லுனர்களாகவும் பார்க்கப்பட்டனர்.

## அறிவு இருவகைப்படும்

### 01. மார்க்கம், அது சார்ந்த அறிவு:

(மார்க்கக் கல்வி என்பது அல்லாஹ், அவன் தூதருக்கு அருளிய தெளிவான வசனங்கள், சான்றுகள், நேர்வழி காட்டும் அம்சங்களை குறிக்கும்)

இக் கல்வியைத்தான் அல்லாஹ் பொதுவாக புகழ்துரைத்துள்ளான். திருமறை அல்குர்ஆன், அல் ஹதீஸ், கல்வி என்று பேசும் போதும் இக்கல்வியையே அது குறிக்கும்.

### 02. லௌகீகக் கல்வி

உதாரணமாக வைத்தியத்துறை, பொறியியல் துறை, இது அல்லாத ஏனைய துறைகளை குறிப்பிடலாம். இவைகள் பல வகைகளாக காணப்படும்:

01

இக் கல்வி, நன்மையின் பக்கம் வழிகாட்டும் சாதனமாக காணப்படும். அவ்வாறாயின் அது சிறந்தது.

02

கல்வி தீமைக்கு வழிகோலும் கல்வியாக இருந்தால் அக்கல்வியும் மோசமானது.

03

நன்மையோ, தீமையோ இரண்டுக்கும் வழிகோலாத கல்வியாக இருந்தால் அதை கற்பதில் நேரத்தை வீணடிப்பதை தவிர வேறொன்றுமில்லை.

## மார்க்க கல்வியின் மகிமையை உணர்த்தும் ஆதாரங்கள் சில.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நிச்சயமாக நபிமார்கள் தீனாரையோ திர்கத்தையோ விட்டுச் செல்லவில்லை, அவர்கள் விட்டுச் சென்றதெல்லாம் அறிவைத்தான், யார் அதை எடுத்துக் கொள்வார்களோ அவர்கள் நிறைவான பாக்கியத்தை பெற்றவர்கள். (நூல்: அஹ்மத்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யாருக்கு அல்லாஹ் நலவை நாடுவானோ அவருக்கு மார்க்கத்தில் விளக்கத்தை கொடுப்பான்.

(நூல்: புகாரி, முஸ்லிம்)

**எவர் மறுமையை அஞ்சி, தன் இறைவனுடைய ரஹ்மத்தை ஆதரவு வைத்து, இராக்காலங்களில் ஸுஜூது செய்தவராகவும், நிலையில் நின்றவராகவும் வணங்குகிறாரோ அவர் (நிராகரிப்பவரைப் போல்) ஆவாரா? (நபியே!) நீர் கூறும் "அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? நிச்சயமாக (இக் குர்ஆனைக் கொண்டு) நல்லுபதேசம் பெறுவோர் அறிவுடையவர்கள் தாம்." (39:9)**

**மார்க்க அறிவின் மகிமைகள் சில:**

01

அல்லாஹு தஆலா இவ்வுலகில் அறிஞர்களின் மதிப்பை அவர்கள் மேற்கொள்ளும் பணிகளுக்கேற்ப உயர்த்துகின்றான், மேலும் மறுமையில் அவர்களின் சுவன அந்தஸ்துக்களையும் உயர்த்துவான்.

02

மரணத்தின் பின் மனிதனின் அமல்கள் நின்றுவிடும், மூன்றைத் தவிர:
நிலையான தர்மம்,
அவன் விட்டுச்செல்லும் பயனுள்ள அறிவு,
துஆக் கேட்கும் நல்ல பிள்ளை.
(முஸ்லிம்)

# அடிப்படை ஐந்து

**நூலாசிரியரின் கூற்று :**

இறை நேசர்கள் யார்? அவர்களைப் போன்று வேடம் பூண்டு அவர்களுக்கெதிரான நயவஞ்சகர்கள், தீயோர்கள் யார்? அவர்களுக்கிடையில் வேறுபாடு என்ன?என்பது பற்றியது.

இது பற்றி விளக்க சூரா ஆல இம்ரான் அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ள திருமறை வசனம் போதுமானது.

*(நபியே!) நீர் கூறும் "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின் பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான் உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான் மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான்.* (3:31)

மேலும் சூரா அல் மாயிதாவில் இடம் பெற்றுள்ள மற்றும் ஒரு வசனம்:

*முஃமின்களே! உங்களில் எவரேனும் தன் மார்க்கத்தைவிட்டு மாறிவிட்டால் (அல்லாஹ்வுக்கு அதனால் நஷ்டமில்லை) அப்பொழுது அல்லாஹ் வேறு ஒரு கூட்டத்தாரைக் கொண்டு வருவான். அவன் அவர்களை நேசிப்பான். அவனை அவர்களும் நேசிப்பார்கள். அவர்கள் முஃமின்களிடம் பணிவாக நடந்து கொள்வார்கள். காஃபிர்களிடம் கடுமையாக இருப்பார்கள். அல்லாஹ்வின் பாதையில் போர் செய்வார்கள். நிந்தனை செய்வோரின் நிந்தனைக்கு அஞ்சமாட்டார்கள். இது அல்லாஹ்வின் அருட்கொடையாகும். இதை அவன் நாடியவருக்குக் கொடுக்கின்றான். அல்லாஹ் மிகவும் விசாலமானவனும் (எல்லாம்) நன்கறிந்தவனுமாக இருக்கின்றான்.* (5:54)

மேலும் சூரா யூனுஸில் இடம் பெற்றுள்ள வசனம்:

*(முஃமின்களே!) அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக அல்லாஹ்வின் நேயர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.*

*அவர்கள் ஈமான் கொண்டு (அல்லாஹ்விடம்) பயபக்தியுடன் நடந்து கொள்வார்கள.* *(10: 63. 62)*

ஆனால், ஈற்றில் மார்க்கத்தின் காவலர்கள், உலக மக்கள் வழிகாட்டிகள், மார்க்க அறிஞர்கள் என்று அறிமுகமானவர்கள் பார்வையில் இறைநேசர்கள் என்றால் தூதரைப் பின்பற்றாமல் இருப்பதும், இறைபாதையில் அறப்போர் புரிவதை புறக்கணிப்பதும், ஈமான் இறையச்சம் அற்றிருப்பதும்தான் என்றாகிவிட்டது.

யார் இறைத்தூதரைப் பின்பற்றி இறை பாதையில் போர் புரிந்து, ஈமானையும் இறையச்சத்தையும் கடைபிடிப்பாரோ அவர் இறைநேசர் அல்லர் என்று கருதினர்.

எங்கள் இறைவா! உன்னிடமே மன்னிப்பையும்.
ஆரோக்கியத்தையும் வேண்டுகிறோம். நிச்சயமாக நீ
பிரார்த்தனைகளை கேட்டு அங்கீகரிப்பவன்.

## இறை நேசர்களை அடையாளம் காண்பது எப்படி?

அவர்கள் அல்லாஹ்வை விசுவாசம் கொண்டு, அவனை பயந்து, அவனுடைய மார்க்கத்தில் நிலைத்திருந்போர்.

திருமறை அல்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

**அவர்கள் ஈமான் கொண்டு (அல்லாஹ்விடம்) பயபக்தியுடன் நடந்து கொள்வார்கள்.** (10:63)

தான் ஒரு வலி( இறைநேசர்) என்று வாதிடுவது, தன்னைத்தான் தூய்மைவாதம் பேசுவதாக மாறிவிடும், இது தக்வா எனும் இறையச்சத்திற்கு எதிரானது.

அல்லாஹ் கூறுகின்றான்:

**உங்களை நீங்களே தூயவர்கள் என கூறவேண்டாம். யார் தக்வா உடையவர்கள் என அல்லாஹ் மிக அறிந்தவன்.** (அன் நஜ்ம்: 102)

**நூலாசிரியர் மூன்று வசனங்களை குறிப்பிட்டுள்ளார்:**

01

**(நபியே!) நீர் கூறும் "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின் பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான் உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான் மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான். (3:31)**

இவ்வசனம் சோதிக்கும் வசனம் என்றழைக்கப்படும், இமாம் ஹஸன் அல் பஸரி (ரஹ்) கூறினார்கள்:

**நபியவர்களின் காலத்தில் சிலர் நாம் எம்மிறைவன் அல்லாஹ்வை அதிகம் நேசிக்கின்றோம் என்று கூறினர்.**

**அந்நேசத்திற்கு அல்லாஹ் ஆதாரத்தை ஏற்படுத்த விரும்பினான். ஆகவே, இவ்வாசனத்தை அருளினான்.**

02

**முஃமின்களே! உங்களில் எவரேனும் தன் மார்க்கத்தைவிட்டு மாறிவிட்டால் (அல்லாஹ்வுக்கு அதனால் நஷ்டமில்லை) அப்பொழுது அல்லாஹ் வேறு ஒரு கூட்டத்தாரைக் கொண்டு வருவான். அவன் அவர்களை நேசிப்பான். அவனை அவர்களும் நேசிப்பார்கள். அவர்கள் முஃமின்களிடம் பணிவாக நடந்து கொள்வார்கள். காஃபிர்களிடம் கடுமையாக இருப்பார்கள். அல்லாஹ்வின் பாதையில் போர் செய்வார்கள். நிந்தனை செய்வோரின் நிந்தனைக்கு அஞ்சமாட்டார்கள். இது அல்லாஹ்வின் அருட்கொடையாகும். இதை அவன் நாடியவருக்குக் கொடுக்கின்றான். அல்லாஹ் மிகவும் விசாலமானவனும் (எல்லாம்) நன்கறிந்தவனுமாக இருக்கின்றான். (5:54)**

அவர்களை அல்லாஹ் பின்வருமாறு வர்ணிக்கின்றான்:

01. முஃமின்களின் மீது பணிவுடன் அன்பு காட்டுபவர்கள், அவர்களுடன் யுத்தம் புரியமாட்டார்கள், அவர்களுக்கு எதிராக செயல்பட மாட்டார்கள், அவர்களை புறக்கணித்து வாழமாட்டார்கள்.

02. எதிரிகள் முன் பலமுடன் இருப்பார்கள். அதாவது அவர்களை வெற்றி கொண்டு அவர்களின் முன் சக்திவாய்ந்தவர்களாக இருப்பர்.

03. அல்லாவின் மார்க்கம் உயர உழைப்பார்கள்.

04. அல்லாவின் மார்க்க விடயத்தில் பழிப்போரின் பழிப்பை பொருட்படுத்தமாட்டார்கள்.

03

**(முஃமின்களே!) அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்க. அவர்கள் ஈமான் கொண்டு (அல்லாஹ்விடம்) பயபக்தியுடன் நடந்து கொள்வார்கள். (10:62-63)**

இவ்வசனத்தில் அல்லாஹ் அவனுடைய இறை நேசர்கள் யார் என அடையாளப்படுத்தியுள்ளான்.

உள்ளத்தில் ஈமானையும் உறுப்புகளில் தக்கவாவையும் சுமந்தவர்கள் என்று வர்ணித்துள்ளான்.

**ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா கூறினார்கள்:**

அல்லாஹ் அவனுடைய வேதமாகிய அல்குர்ஆனிலும் நபி (ஸல்) அவர்கள் சுன்னாவிலும் விளக்கிய விடயம், மனிதர்களில் அல்லாஹ்வுக்கென இறை நேசர்கள் இருப்பது போல் சைத்தானுக்கும் சைத்தானிய நேசர்களும் உள்ளனர். இறை நேசர்களுக்கிடையிலும் சைத்தானின் தோழர்களுக்கிடையிலும் பாரிய வித்தியாசம் உண்டு.

**இறை நேசர்கள்:**

அவர்கள் பற்றி திருமறை பின்வருமாறு இயம்புகின்றது

**(முஃமின்களே!) அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்க. அவர்கள் ஈமான் கொண்டு (அல்லாஹ்விடம்) பயபக்தியுடன் நடந்து கொள்வார்கள். (10:62-63)**

**சைத்தானின் தோழர்கள்:**

அவர்கள் பற்றி திருமறை கூறும் போது:

**திடனாக அவனுடைய அதிகாரமெல்லாம், அவனைக் காரியகர்த்தனாக்கிக் கொள்கிறவர்கள் மீதும், அவனுக்கு இணைவைத்தார்களே அவர்கள் மீதும்தான் (செல்லும்). (16:100)**

## ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா கூறினார்கள்:

ஏராளமான அறிஞர்களும் ஷைகுமார்களும் குறிப்பிடுகின்றனர்:

**ஒருவரை ஆகாயத்தில் பறக்கக் கண்டாலோ, நீரின் மேல் நடக்கக் கண்டாலோ, மார்க்க ஏவல் விலக்கல்களுக்கு எந்த அளவு கட்டுப்படுகிறார் என்பதை பார்க்காமல் ஏமாந்து விட வேண்டாம்.**

## இறைநேசர்கள் இருவகையினர்

| 01 | 02 |
|---|---|
| السابقون المقربون<br>முந்தி செல்வோர் நெருக்கம் பெறுவோர். | أصحاب اليمين المقتصدون<br>வலப்பக்கம் உடையோர் சமநிலை பேணுவோர். |

இவ்விரு சாரார் பற்றி வல்லோன் அல்லாஹ் அவனது திருமறையில் பல இடங்களில் குறிப்பாக சூரா அல்வாகிஆவின் ஆரம்பத்தில், அதன் இறுதியில், அல் இன்சான் அத்தியாயம், மற்றும் ஃபாதிர் போன்ற அத்தியாயங்களிலும் குறிப்பிட்டுள்ளான்.

**சுவர்க்கம் பல்வேறு படித்தரங்களை கொண்டது எனவும் ஒவ்வொரு படித்தரங்களும் பாரிய வித்தியாசத்தை கொண்டது எனவும் இறையச்சம் கொண்ட விசுவாசிகளான இறை நேசர்கள், அவர்களின் ஈமான் இறையச்சத்திற்கு ஏற்ப அந்தப் படித்தரங்களை அடைந்து கொள்வர்.**

## இறைநேசர்களை மக்கள் அணுகும் விதம் மூன்று:

**01.**

எல்லை மீறுவோர்: இவர்கள், ஒருவரை இறைநேசர் என நம்பி அவர் உள்ளத்தில் உதிக்கும் அம்சங்களை இறைவாக்காகவும், இறைவன் செய்யும் காரியங்கள் அனைத்தையும் இவரிடம் ஒப்படைத்து விட்டதாகவும் அவர் கூற, இவர்கள் நம்புவார்களாகக் காணப்படுவார்கள்.

**02.**

உதாசீனம் செய்வோர்:

இவர்கள் மார்க்கத்துக்கு உடன்படாத எந்த விடயத்தையாவது யாராவது புரிந்துவிட்டால் அல்லது சொல்லிவிட்டால் அவர் தவறாக இஜ்திஹாத் அடிப்படையில் செய்துவிட்டாலும் அவரை அதேகணம் அல்லாஹ்வின் விலாயத்திலிருந்து தூக்கிவீசிவிடுவர்.

**03.**

சமநிலை பேணுவோர்:இவர்கள், யாரையும் பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட்டவர் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கவும் மாட்டார்கள், இஜ்திஹாத் (சுய ஆய்வு) அடிப்படையில் தவறுதலாக ஏதும் நடந்து விட்டாலும் அவரை பாவியாகப் பார்க்கவும் மாட்டார்கள். அவர் சொல்வதையெல்லாம் கண்மூடித்தமாக நம்பி பின்பற்றவும் மாட்டார்கள். இஜ்திஹாத் அடிப்படையில் நிகழும் தவறுக்காக ஒருவரை காபிர் என்றோ (ஃபாசிக்) கெட்டவன் என்றோ அழைக்க மாட்டார்கள்.

## இறை நேசர்களின் "கராமத்"

(இப்பிரயோகம் மூன்று விதமாக நோக்கப்படவேண்டும்)

01. **உறுதிப்படுத்தப்பட்டது.**

இறையச்சம் கொண்ட இறைநேசர்களுக்கு அவர்களை கண்ணியப்படுத்தும் விதமாக கராமத் (இறை கண்ணியம்) நிகழும்.

ஒன்று அதன் மூலம் மார்க்கம் உயரும் அல்லது முஸ்லிம்களின் ஏதோ ஒரு தேவை நிறைவேறும்.

02. **இறைத்தூதரை உண்மைப்படுத்தும் விதமாக நிகழும் கராமத்:**

அதாவது அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்)அவர்களை பின்பற்றுவதன் பரக்கத்தால் நிகழும் கறாமத்துகள். இவை எதார்த்தத்தில் இறைத்தூதர்களைப் பலப்படுத்தும் அற்புதங்களாக கணிக்கப்படும்.

03. **ஒரு இறைநேசரின் தேவை கருதி மாத்திரம் நிகழும் கராமத்.**

அதாவது ஒருவரின் தேவை கருதி இவ்வகை கராமத்துக்கள் நிகழும். உதாரணமாக, அவருடைய ஈமான் பலவீனப்படும்போது அதை பலப்படுத்தி அத்தேவையை நிவர்த்தி செய்யும் விதமாக அக் கராமத் காணப்படும்.

அதே நேரம் இவரை விட 'விலாயத்' இறைநேச தரத்தில் கூடியவருக்கு இதுபோன்று நிகழாமல் இருக்கலாம். ஏனெனில் அவருக்கு அது தேவையில்லை. ஆகவேதான் கறாமத்துகள் தாபியீன்கள் காலத்தில் அதிகம் நிகழ்ந்தன, சஹாபாக்களுக்கு அதிகம் நிகழவில்லை. காரணம், சஹாபாக்களுக்கு அது தேவையில்லை.

## வழமைக்கு மாற்றமான அசாதாரண சம்பவங்கள்

இது உலக வளமைக்கு மாற்றமாக நிகழும் வித்தியாசமான சம்பவங்களை குறிக்கின்றது. உதாரணமாக ஆகாயத்தில் பறப்பது, நீரின் மேல் நடப்பது ஆகியவற்றை குறிப்பிடலாம். இது நான்கு வகைகளாக நோக்கப்படும்.

**1. الآية (அத்தாட்சி, அற்புதம்)**

இது நபிமார்களுக்கு மாத்திரம் உரியது.

"ஆயத்" எனும் இச்சொல்லாடல் நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அத்தாட்சிகளை குறித்து குர்ஆனில் பிரயோகிக்கப்படுகிறது. "முஃஜிஸத்" எனும் பதம் பயன்படுத்தப்படவில்லை.

ஆயத் என்பது நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின் எவருக்கும் நிகழாது.

**02. كرامة (கறாமத்)**

இது இறை நேசர்களுக்குரியது. அவர்கள் யாரெனில் ஈமான், இறையச்சம் இவ்விரண்டையும் அணிகலன்களாகக் கொண்டவர்கள். கறாமத்துக்கு எடுத்துக்காட்டாக திருமறை அல்குர்ஆன் கூறும் குகைவாசிகள் சம்பவத்தை எடுத்துக் கொள்ளலாம்.

**03. المعجزة أو الفتنة (முஃஜிஸத் அல்லது ஃபித்னா)**

இது சைத்தானின் நேசர்களுக்கு நிகழும் வழமைக்கு மாற்றமான சம்பவங்கள்.

இதை நாம், யார் வசம் நிகழ்கிறதோ அவரின் மார்க்கப்பற்றை வைத்து அடையாளம் காணலாம்.

மார்க்கப்பற்று இல்லாவிடின் இவ்வகையைச் சார்ந்ததாக மாறிவிடும். உதாரணமாக தஜ்ஜாலின் கைவசம் நிகழும் அற்புதங்களை எடுத்துக்

04. فضيحة (அவமானம்)

இறைவனின் மார்க்கத்தின் பெயரால் மக்களிடம் பொய் கூறி ஏமாற்ற முயல்வோர். இவர்கள் மறுமைக்கு முன் இம்மையில் அவமானப்படுவர். அவர்கள் அவமானப்படும் விதமாக வழமைக்கு மாற்றமான ஒன்றை அல்லா நிகழ்த்துவான்.

உதாரணமாக பொய் நபியாக தோற்றமெடுத்த முசைலமா என்பவன் கண்ணோயால் பீடிக்கப்பட்ட ஒருவருக்கு நபி போன்று கண்ணில் உமிழ்ந்த போது அக்கண் குருடாகிப் போனது.

**"ஹவாரிக்குள் ஆதாத்" எனும் வழமைக்கு மாற்றமான சம்பவங்கள் நிகழும் போது மனிதர்கள் மூவகையினராகக் காணப்படுகின்றனர்.**

**01. பொய்ப்பிப்போர்:**

அதாவது நபிமார்கள் தவிர்ந்த வேறு எவருக்கும் இப்படி நிகழாது என்ற நிலைப்பாட்டை உடையோர். சிலவேளை அவர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இது போன்ற சம்பவங்கள் சொல்லப்படும் போது பெரும்பாலும் அதை ஏற்க மறுப்பார்கள். ஏனெனில் இது வெளிப்படும் நபர்கள் இறைநேசர்கள் என்று அவர்களால் நம்ப முடியவில்லை.

**02. எல்லை மீறியோர்:**

இவர்கள் யாருக்காவது சிறியதொரு வளமைக்கு மாற்றமான ஒன்று நிகழ்ந்து விட்டால் உடனே அவரை இறைநேசர் என்று நம்பி விடுவார்கள்.

**03. சமநிலை பேணுவோர்:**

இவர்கள் அல்லாஹ், அவன் நாடிய அடியார்களுக்கு அவன் விரும்பும் விதத்தில் வழமைக்கு மாற்றமான கறாமத்துக்களை வழங்குவான் என்று நம்புவர்.

அதே நேரம் வழமைக்கு மாற்றமாக நிகழும் அனைத்தையும் கறாமத்தாக ஏற்றுக்கொள்ள முடியாது என்ற தெளிவுடன் இருப்பர்.

ஏனெனில் சூனியக்காரர்களும் தஜ்ஜால்களும் சில வேலை வழமைக்கு மாற்றமான விசித்திரமான செயல்களை வெளிப்படுத்துவர்.

**ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா அவர்கள் ''ரஹ்மானின் நேசர்களுக்கும் ஷைத்தானின் நேசர்களுக்கும் இடையிலான வேறுபாடு'' எனும் நூலில் குறிப்பிட்ட இரு சாராருக்குமிடையில் காணப்படும் வித்தியாசங்களின் சுருக்கம் வருமாறு.**

| இறை நேசர்கள்: | சைத்தானின் நேசர்கள்: |
| --- | --- |
| திருமறை அல்குர்ஆனையும் நபிவழி சுன்னாவையும் பின்பற்றுவார்கள். | திருமறை அல்குர்ஆன் நபிவழி சுன்னாவை புறக்கணிப்பார்கள். |
| ஈமானையும் இறையச்சத்தையும் பிரதிபலிப்பார்கள். | இறை நிராகரிப்பு, கெட்ட நடத்தை, சாத்திரம், சூனியம், பைத்தியம், மன உதிப்புக்கள் என்பவற்றை பிரதிபலிப்பார்கள். |
| நபியை பின்பற்றுவார்கள், அவர்கள் ஷரீஆவை விட்டும் வெளியில் சென்று தன்னிச்சையாக செயல்படமாட்டார்கள். | நபியை புறக்கணித்து அவர்கள் ஷரீயாவை விட்டு முற்றாக வெளிநடப்பு செய்வார்கள். |
| நபி (ஸல்) அவர்களை பின்பற்றுமாறும், கடமைகளை நிறைவேற்றுமாறும், இறைவனிடம் பிரார்த்திக்குமாறும் மக்களை தூண்டுவார்கள். | அவர்களைப் பின்பற்றுமாறு மக்களை தூண்டுவார்கள். மார்க்க கடமைகளை நிறைவேற்றமாட்டார்கள், இறைவனிடம் பிரார்த்திக்கவும் மாட்டார்கள். |
| ஒரு இறைநேசரை விட நபி உயர்ந்தவர்கள் என்று உறுதியாக நம்புவார்கள். அதே நேரம் ஒரு வலி பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர் அல்ல என்றும் நம்புவார்கள். | ஒரு நபியை விட ஒரு இறைநேசர் உயர்ந்தவர் என்று நம்புவார்கள். அதே நேரம் அவர் பாவங்களில் இருந்து பாதுகாக்கப்பட்டவர் என்றும், உலமாக்களின் (இஜ்மா) முடிவுகளுக்கு முரண்பட முடியும் என்றும் நம்புவார்கள். |
| ஈமானும் இறையச்சமும்தான் அவர்களுக்கு நிகழும் கிராமத்தின் காரணம் என்று கூறுவார்கள். | |

**இறை நேசர்கள்:**

அவர்கள் அல்லாஹ்வுக்காக நேசிக்கப்படவேண்டியவர்கள்.

நயவஞ்சகத்திலிருந்து பயப்படுவார்கள், தங்களது கௌரவத்தால் ஏமாந்துவிடமாட்டார்கள்.

மக்களை விட்டும் வித்தியாசப்படாது சுன்னாவை கடைப்பிடித்து தொழுகுவார்கள்.

அவர்களிடத்தில் எதிலும் அலட்சியப் போக்கோ, அளவு கடந்த போக்கோ காணப்படாது.

உள்ளும் புறமும் ஈமானை பிரதிபலிப்பார்கள்

நபி (ஸல்) அவர்கள் உள்ரங்க அறிவற்ற வெளிரங்க அறிவை மாத்திரம் கொண்டவர்கள் என்று யாராவது நம்பினால் அவர் காபிராகிவிடுவார்.

நபி (ஸல்)அவர்கள் அடைந்த விலாயத்துக்கு நிகரில்லை என்று ஏற்றுக்கொள்வர்.

கழாஃ கத்ர் நம்பிக்கையை குறைகள், தவறுகளுக்காக அல்லாது சோதனைகள் ஏற்படும் போது மாத்திரம் ஆதாரமாக கொள்வர்.

**சைத்தானின் நேசர்கள்:**

இறைவனுக்காக வெறுத்தொடுக்கப்பட வேண்டியவர்கள்.

நயவஞ்சகத்தை பயப்பட மாட்டார்கள்.

தன்மதிப்பை வைத்து தற்பெருமையால் மமதை கொள்வார்கள்.

மற்றவர்களை விட்டும் வித்தியாசமாக ஆடைகள் அணிந்து தலை முடிகளை சிரைத்துக் கொள்வார்கள்.

அந்நியவர்களுக்கு ஒப்பாகுவார்கள்.

அவர்களிடம் அனைத்திலும் அலட்சியப் போக்கும் அளவு கடந்த போக்கும் காணப்படும்.

ஈமானை வெளிப்படையானது மறைமுகமானது என்று இரண்டாக பிரித்துப் பார்ப்பார்கள்.

அவர்களின் சீடர்கள் அவர்களை மறைவான ஞானம் கொண்டவர்கள் என்று நம்புவார்கள்.

இறைநேசர்களும் நபிமார்களும் ஓரிடத்தில் இருந்தே அறிவைப் பெறுவதாக நம்புவார்கள்.

| | |
|---|---|
| பாவிகள், நல்லது செய்தால் கழாஃ கத்ரை நம்பாது தற்பெருமை கொள்வார்கள்.<br><br>தவறிழைத்தால், தீயது நடந்தால் கழாஃ கத்ரில் பழியை போட்டு தப்பித்துக் கொள்வார்கள்.<br><br>அத்வைதம், இறைவன் மனிதனில் சங்கமிக்கிறான் எனும் கோட்பாட்டு கொண்டவர்கள்.<br><br>ஷைத்தான்கள் அவர்களை குழப்பும் போது, அவர்களை வானவர்கள் என்று நம்பி விடுவார்கள்.<br><br>அவர்களின் சீடர்கள் அவர்களை வானவர்கள் ,நபிமார்களின் தனித்துவப்பண்புகளை கொண்டவர்கள் என நம்புவார்கள்.<br><br>மன்னறைகளை மஸ்ஜிதுகளாக ஆக்கிக்கொள்வார்கள்.<br><br>ஷைத்தானிய செயல்களை ஊக்குவிக்கும் வண்ணம் விசில் அடித்தல், கைதட்டுதல், பாடல்கள் இசைத்தல் போன்றவற்றை செய்வார்கள். | பாவத்தில் பிடிவாதமாக இருக்க மாட்டார்கள், இது ஓர் அடியானை அல்லாஹ் நேசிப்பதன் அடையாளங்களில் ஒன்று.<br><br>அவர்கள் வணக்கங்களை பள்ளிவாயில்களில் நிறைவேற்றுவார்கள்.<br><br>அவர்கள் பார்வையில் கராமத் என்பதன் குறிக்கோள் இறைவழியில் இறுதி வரை நிலைத்திருப்பதாகும். |

# அடிப்படை ஆறு

**பல்வேறுபட்ட தனிநபர் கருத்துக்கள், மனோ இச்சைகளுக்கு முன்னுரிமை வழங்கி , திருமறை 'அல்குர்ஆன்' நபி வழி 'சுன்னாவை' புறக்கணிக்கும் ஷைத்தான் உருவாக்கிய தீய சிந்தனைக்கான மறுப்பு.**

அதாவது, சட்டத்துறையில் சுயாதீனமாக ஆய்வு செய்ய தகுதி பெற்றவரை (முஜ்தஹித் முத்லக்)த் தவிர குர்ஆனையோ, சுன்னாவையோ வேறு எவராலும் விழங்க முடியாது என்கிற வாதம்.

மார்க்கத்தை விளங்க இவர்கள் கூறும் இத்திறமை, தகைமை முழுவதும் அபூபக்கர் உமர் போன்றவர்களிடம் கூட முழுமையாக காணப்படவில்லை!

மேலும் இத்திறமை காணப்படாவிடின் எவ்வித ஐயமுமின்றி அவசியம் குர்ஆன், ஹதீதை விளங்க முயற்சிப்பதை கைவிடவேண்டும் என்று கூறுகின்றனர்.

அவ்வாறு இத்தகைமையற்ற ஒருவர் விளங்க முற்படுவாராயின் அவர் முனாஃபிக் அல்லது பைத்தியக்காரர். ஏனெனில் அது கடினமான ஒரு விடயமாகும் என்பர்!!

சுப்ஹானல்லாஹ்!!! அல்லாஹ்வே தூயவன், புகழுக்குரியவன். அவன் குர்ஆனூடாகவும், அறிவுபூர்வமாகவும், நடைமுறைரீதியாகவும், பல விதங்களில் இவ்வாதத்திற்கு தக்க பதில் அளித்துள்ளான், எந்தளவுக்கெனில் அவசியம் அனைவராலும் அறியப்பட வேண்டிய மார்க்க அடிப்படை அம்சங்களை விளக்கும் அளவுக்கு விபரித்துள்ளான்.

*எனினும் மனிதர்களில் பெரும் பாலோர் அதை அறிய மாட்டார்கள்" என்று கூறுவீராக. (7:187)*

*இவர்களில் பெரும்பாலோர் மீது (இவர்களுக்கு வரவிருக்கும் வேதனை பற்றிய) வாக்கு நிச்சயமாக உண்மையாகிவிட்டது ஆகவே இவர்கள் ஈமான் கொள்ளமாட்டார்கள்.*

*நிச்சயமாக நாம் அவர்களுடைய கழுத்துகளில் மோவாய்க் கட்டைகள் வரையில், அரிகண்டங்களைப் போட்டிருக்கின்றோம், ஆகவே அவர்கள் (குனிய முடியாதவாறு) தலை நிமிர்ந்து விட்டனர்.*

*இன்னும் நாம் அவர்களுக்கு முன்னே ஒரு தடுப்பையும் அவர்களுக்குப் பின்னே ஒரு தடுப்பையும் ஏற்படுத்தியுள்ளோம் (இவ்வாறாக) அவர்களை மூடிவிட்டோம் – ஆகையால் அவர்கள் பார்க்க முடியாது.*

*இன்னும், அவர்களை நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதும் அல்லது அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யாமலிருப்பதும் அவர்களுக்கு சமமே தான் அவர்கள் ஈமான் கொள்ள மாட்டார்கள்.*

*நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதெல்லாம் உபதேசத்தைப் பின்பற்றி யார் மறைவாகவும் அர்ரஹ்மானுக்கு அஞ்சி நடக்கிறார்களோ அவர்களைத் தான் அ(த்தகைய)வருக்கு மன்னிப்பும் மகத்தான நற்கூலியும் உண்டென்று நன்மாராயம் கூறுவீராக. ( 36:7–11)*

## இஜ்திஹாத் என்றால் என்ன?

| மொழி ரீதியாக: | நடைமுறையில்: |
| --- | --- |
| கடினமான ஒன்றை புரிய முயற்சிப்பதற்கு சொல்லப்படும். | மார்க்க சட்டமொன்றை புரிந்துகொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வதை இது குறிக்கிறது. |

## இஜ்திகாதிற்குரிய நிபந்தனைகள்:

| 01 | 02 | 03 |
|---|---|---|
| தேவைப்படும் மார்க்க ஆதாரங்களை அறிந்திருத்தல். உதாரணமாக சட்டம் சார்ந்த குர்ஆன் வசனங்கள், ஹதீதுகள் போன்றவை. | ஒரு ஹதீதை ஆதாரப்பூர்வமான தா? பலவீனமானதா? என்பதை இனங்காணும் அறிவைப் பெற்றிருத்தல். உதாரணமாக அறிவிப்பாளர் வரிசை பற்றிய அறிவு. | முந்தைய சட்டங்களை மாற்றிய ஆதாரம் எது? மாற்றப்பட்ட சட்டம் எது? என்பதையும், அறிஞர்களின் ஏகோபித்த முடிவு 'இஜ்மா:' இடம்பெற்றுள்ள அம்சங்களையும் அறிந்திருத்தல். **அப்போதுதான் மாற்றப்பட்ட சட்டத்தை சட்டமாக சொல்லி விடாமலும், இஜ்மா:வான அம்சங்களுக்கு முரண்படாமல் இருப்பதும் சாத்தியப்படும்.** |

04

ஒரு விடயத்தில், அது பற்றிய சட்டம் மாறுபடக் காரணமாக அமையும் ஆதாரங்களை அறிந்திருத்தல். அதாவது, பொதுவாக வரும் ஒரு ஆதாரத்தின் பொதுத்தன்மையை குறிப்பாக்கும், அல்லது அதை மட்டுப்படுத்தும் ஆதாரங்களை குறிப்பிடலாம்.

05

ஆதாரங்களில் பிரயோகிக்கப்படும் சொல்லாடல்கள் குறித்துநிற்கும் அர்த்தங்களை புரிந்துகொள்ளும் அளவுக்கு மொழி அறிவும், ஷரீஆ சட்ட மூல தத்துவங்கள் பற்றிய அறிவும் இருத்தல் வேண்டும்.

06

மார்க்க ஆதாரங்களிலிருந்து சட்டங்களை இயற்றுவதற்கான இயலுமையும், திறமையும் அவரிடம் இருத்தல் வேண்டும்.

**ஒருவர், குறித்த ஒரு மார்க்க விடயத்தில் மாத்திரம் இஜ்திஹாத் செய்ய முடியுமா? அல்லது மார்க்க சட்டங்கள் அனைத்திலும் அத்திறமை அவருக்கு இருக்க வேண்டுமா?**

இல்லை! இஜ்திஹாத் எனும் ஆய்வு முயற்சி, குறித்த ஒரு விடயத்தில் இடம்பெறலாம், ஏனைய மார்க்க சட்டங்களில் அவருக்கு அத்திறமை இல்லாமல் இருக்கலாம்.

இஜ்திஹாத் மேற்கொள்ளும் ஒருவர் தன் முயற்சியை அவ்விடயத்தில் முழுமையாக மேற்கொண்ட பின், பின்வரும் நடைமுறையை கடைப்பிடிப்பார்:

01. ஆய்வின் பின் தீர்க்கமான முடிவை அவர் எட்டிவிட்டால் அதைக் கொண்டு அவர் தீர்ப்பளிப்பார். அப்படி செய்தால்...

01. அவர் சரியான முடிவை எட்டி இருக்கலாம், அவருக்கு இரு கூலிகள் உண்டு. ஒன்று அவர் மேற்கொண்ட முயற்சிக்காக, மற்றது சரியான முடிவை எட்டியதற்காக. ஏனெனில் சரியான முடிவை கண்டறிந்தது, அதை வெளிப்படுத்தி அது அமுல்படுத்தப்படுவது அவருக்கு கூலியை பெற்றுக் கொடுக்கிறது.

02. பிழையான முடிவை எட்டி இருந்தால் அவருக்கு ஒரு கூலி உண்டு. தவறு மன்னிக்கப்பட்டுவிடும்.

03. ஆய்வில் எந்த ஒரு முடிவையும் எட்ட முடியாது போனால், அத்துடன் நிறுத்திவிட்டு அவரை விட தகுதி கூடிய ஒரு அறிஞரை குறித்த சட்ட விடயத்தில் பின்பற்றுவது கூடும்.

**’தக்லீத்‘ இன்னொருவரின் மார்க்க ஆய்வின் முடிவுகளை அப்படியே பின்பற்றும் சந்தர்ப்பங்கள் இரண்டு:**

01.
பின்பற்றுபவர் மார்க்க சட்டமொன்றை தானாக அறிய இயலாத பாமரனாக இருந்தால் அவர் அவசியம் பின்பற்றவேண்டும். இதற்கு ஆதாரமாக பின்வரும் வசனம் அமைந்துள்ளது:

“நீங்கள் (இதனை) அறிந்து கொள்ளாமலிருந்தால். (முந்திய) வேத ஞானம் பெற்றோரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்” (என்று கூறுவீராக). (16:43)

02.
முஜ்தஹிதாக இருந்தும் திடீரென நிகழ்த பிரச்சினைக்கு அவசரமாக தீர்வுகாண முடியாத போது இன்னொருவரைப் பின்பற்றமுடியும்.

**’தக்லீத்‘ இன்னொருவரின் மார்க்கரீதியான ஆய்வின் முடிவுகளை அப்படியே பின்பற்றுவது இருவகைப்படும்:**

**01. பொதுவானது**
அதாவது குறித்த ஒரு மத்கபை அதில் கூறப்படும் சலுகைகள் கடமைகள் யாவற்றையும் தனது மார்க்க விவகாரங்களில் அணு அணுவாக பின்பற்றுதல்.
இச்செயற்பாடு பற்றி அறிஞர்களிடம் பல கருத்துக்கள் நிலவுகின்றன: சிலர் இப்படி செயல்படுவது ஹறாம் என்றும் தீர்ப்பளித்துள்ளனர். காரணம், இதில் நபி (ஸல்) அவர்கள் அல்லாத ஒருவரை எவ்வித கட்டுப்பாடுகள், வரையறைகள் அன்றி முழுவதுமாக பின்பற்றும் நிலை ஏற்படுகின்றது.

## 02. குறிப்பானது.

குறித்த ஒரு விவகாரத்தில் குறித்த ஒரு மார்க்க அறிஞரின் கருத்தை பின்பற்றுதல்.

இது ஆகுமானது, உண்மையை அறிய முடியாது போனால் இன்னொருவரை பின்பற்றுவதில் தவறில்லை. இது:

- ஒன்றில் அறவே முடியாது போனாலும் சரி,
- அல்லது கடும் பிரயத்தனம் மேற்கொண்டால் மாத்திரமே சாத்தியப்படும் என்றாலும் சரி.

**நூலாசிரியரின் கூற்று:**

**எல்லாம் வல்ல அகிலத்தாரின் இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே புகழ் அனைத்தும், எங்கள் தலைவர் நபிகள் நாதர் அவர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தினர், உத்தமத் தோழர்கள் அனைவர்கள் மீதும் அல்லாஹ்வின் ஸலவாத்தும் சலாமும் மறுமை நாள் வரை நிலவட்டுமாக.**

**அல்லாஹுத்தஆலா நூலாசிரியர் அவர்களுக்கு மிகச்சிறந்த கூலியை வழங்குவானாக! அவர்களையும் எம்மையும் ஒன்றாக சுகங்கள் நிறைந்த சுவனபதியில் சேர்த்துவைப்பானாக!**

**நிச்சயமாக அவன் மிகக் கிருபையாளன் கொடையாளன்.**

**எல்லா புகழும் ஏக இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே.**

# மதிப்பீடு

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| | |
|---|---|
| [1] ........................................................................ [2] ........................................................................ | ஆறு அடிப்படைகளை எதற்காக படிக்க வேண்டும்? |
| [1] ........................................................................ [2] ........................................................................ [3] ........................................................................ [4] ........................................................................ [5] ........................................................................ [6] ........................................................................ | ஆறு அடிப்படைகளையும் அதற்கு எதிரானவற்றையும் குறிப்பிடுக. |
| [1] ........................................................................ [2] | இறை நேசர்களுக்கும் ஷைத்தானின் நேசர்களுக்கும் இடையில் காணப்படும் |

| | |
|---|---|
| ............................................................... [3] ............................................................... [4] ............................................................... [5] ............................................................... | ஐந்து வித்தியாசங்களை தருக. |

சரியான பதிலை தெரிவு செய்க:

| ஆறு அடிப்படைகள் |
|---|
| இஜ்மாஃ வான விடயங்கள்: ☐<br>கருத்து வேறுபாடுள்ள விடயங்கள்: ☐ |
| குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களில் எண்ணிக்கைகள் குறிப்பிடப்படுவது:<br>நோக்கத்தின் அடிப்படையில் ☐<br>எவ்வித நோக்கமும் இன்றி ☐<br>இரண்டும் இல்லை. பிரித்து நோக்க வேண்டும் ☐ |
| |

03. சரியாயின் சரியெனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

| வினா | சரி | பிழை |
|---|---|---|
| மார்க்க ஆதாரங்களில் சில வேளை எண்ணிக்கைகள் குறிப்பிடப்படும், ஆனால் அதற்கு எந்த ஒரு அர்த்தமும் காணப்படாது. உதாரணம் சுவனத்தின் கதவுகளின் எண்ணிக்கைகள். | ☐ | ☐ |

| வினா | சரி | பிழை |
|---|---|---|
| சிலவேளை எண்ணிக்கைகள் ஏதோ ஒரு நோக்கத்தின் அடிப்படையில் கூறப்படும். உதாரணம் சுவனத்தை கொண்டு நன்மாராயம் கூறப்பட்டோர் 10 பேர். | | |
| மார்க்க சபையில் ஒரு எண்ணிக்கையை குறிப்பிடுவது மார்க்க விடயங்களை கிரகித்து அதை மீட்டிப் பார்ப்பதற்காக. | ☐ | ☐ |
| ஆறு அடிப்படைகள் எனும் எண்ணிக்கையுடன் இவ் அடிப்படைகளை தொகுத்த நூலாசிரியருக்கு இவ் ஆற்றலை கொடுத்தவன் அல்லாஹ்தான். | ☐ | ☐ |

**04. அர்த்தத்துடன், நோக்கத்துடன் இடம்பெற்றுள்ள எண்ணிக்கையை சுற்றி வட்டமிடுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| ஈமானின் அடிப்படைகள் ஆறு | ஏழு பெரும் பாவங்கள் | மூன்று அடிப்படைகள் | இயற்கை பண்புகள்5 |
| நாய் வாய்விட்ட பாத்திரத்தை ஏழு தடவைகள் கழுவுதல் | எனது சமூகத்தினர் 73 பிரிவுகளாக பிரிவார்கள் | மனிதர்களிடம் இரண்டு அம்சங்கள் உள்ளன அதன் மூலம் அவர்கள் குஃப்ருக்கு சென்று விடுவார்கள் | கடமையான தொழுகைகளுக்குப் பின் ஓதப்படும் திக்ர்கள் எண்ணிக்கை. |

**05. இந்நூலில் வந்துள்ள அதிகரிக்க முடியாத, வரையறுக்கப்பட்ட எண்ணிக்கை எது? அதிகரிக்க முடியுமான வரையறுக்கப்படாத எண்ணிக்கை எது என்பதை எது?**

| | | | |
|---|---|---|---|
| الأصول السِّتَّة.<br>ஆறு அடிப்படைகள். | نواقض الإسلام العشرة.<br>இஸ்லாத்தை முறிக்கும் 10 அம்சங்கள் | القواعد الأربع.<br>நான்கு விதிகள் | الأصول الثَّلاثة.<br>மூன்று அடிப்படைகள் |
| .............. | .............. | .............. | .............. |